www.Padasalai.Net

# 50 வயதினை கடந்த ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை - விண்ணப்பம்

1. ஆசிரியர் பெயர் :

2. பதவி :

3. தற்போது பணிபுரியும் பள்ளி :

4. ஓய்வு பெறும் நாள் :

5. வயது (01.01.2025ல் உள்ளவாறு) :

6. ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டீர்களா? : ஆம் / இல்லை

7. மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளும் அரசு மருத்துவமனையின் பெயர் :

8. பள்ளித் தலைமை ஆசிரியர் பரிந்துரை :

9. பள்ளித் தலைமை ஆசிரியர் கையொப்பம் :

Padasalai

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –06.

ந.க.எண். 17510/எம்1/இ3/2024, நாள். .02.2025.

---------

பொருள் : பள்ளிக் கல்வி – ஆசிரியர் நலன் – 50 வயதினை கடந்த ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை – திட்டம் செயல்படுத்துதல் – நெறிமுறைகள் – ஆணை – தொடர்பாக.

பார்வை 1 அரசாணை (நிலை) எண். 41 பள்ளிக்கல்வித்துறை (ப.க.5(1)) துறைநாள். 13.02.2024.

2 இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களின் செய்திவெளியீடு எண். 408, நாள். 01. 03.2023.

---------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.03.2023 அன்று 50 வயதினை கடந்த ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழுஉடல் பரிசோதனை செய்வது தொடர்பான இத்திட்டச் சார்ந்த செய்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்.

இத்திட்டம் தொடர்பாக பார்வை(1)இல் காணும் அரசாணையில் அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்வதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாணையில், முதற்கட்டமாக 50 வயதிற்கு மேற்பட்ட அனைத்துவகை ஆசிரியர்களுக்கு மட்டும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளிக் கல்வித்துறையில் 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு (Package–1 Gold Scheme) திட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் பரிசோதனைகளை மேற்கொள்ள பார்வையில் காணும் அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. Complete Haemogram
2. ESR Urine Analysis
3. Blood Sugar F & PP
4. Urea,Creatinine,Uric Acid
5. Lipid Profiles
6. Total Cholesterol(HDL&LDL)
7. Triglycerides, Total Cholesterol HDL ratio.
8. Liver Function Test
9. Serum Bilirubin(Total & direct)
10. AST,ALT,SAP,Total Protein And Albumin
11. Hbs/Ag
12. Blood Grouping &Typing
13. ECG
14. X-Ray Chest
15. USG Abdomen
16. Pap Smear

எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள 50 வயதினை கடந்தவர்களில் வயது மூப்பு அடிப்படையில் தற்போது 150 ஆசிரியர்களை இத்திட்டத்தின் கீழ் பயன் பெற தெரிவு செய்யப்பட வேண்டும். 50 வயதினை கடந்த ஆசிரியர்களிடமிருந்து இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தின் படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சார்ந்த பள்ளியின் தலைமையாசிரிர்கள் உரிய

பரிந்துரையுடன் 28.02.2025 க்குள் சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு சமர்பிக்க வேண்டும்.

பெறப்பட்ட விண்ணப்பங்களை 07.03.2025 க்குள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் பரிசிலினை செய்து, 150 ஆசிரியர்களை தெரிவு செய்தல் வேண்டும். மேலும், தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் சார்ந்த விவரங்களை மாவட்ட அளவிலான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுததுறை அலுவலருக்கு சமர்பித்து உடல் நல பரிசோதனைக்கான கால அட்டவணையினை தயாரித்து அதன் தகவல்களை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் தெரிவித்து ஆணை வழங்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பில் உள்ள அட்டவணையின் படி மாவட்ட வாரியாக 150 ஆசிரியர்களை தெரிவு செய்து (Package–1 Gold Scheme) திட்டத்தின் கீழ் பயன் பெற தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், இத்திட்டத்திற்கென இணைப்பில் உள்ள விவரப்படி, தலா ரூ.1,50,000/– ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஓதுக்கீடு செய்து 38 மாவட்டத்திற்கும் ரூ.57,00,000/– தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து அனுமதித்து ஆணை வழுங்கப்படுகிறது.

இணைப்பு: 1. விண்ணப்பப் படிவம் –1
2. அரசாணை
3. இணைப்பு –1

இயக்குநர்
14/2/25

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டங்கள்

நகல்

அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித்துறை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

இணைப்பு - 1

| 50 வயதினை கடந்த ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல்பரிசோதனை செலவின ஒதுக்கீடு | | | | |
|---|---|---|---|---|
| வ.எண். | மாவட்டம் | ஆசிரியர் எண்ணிக்கை | அனுமதிக்கப்படும் தொகை | மொத்தம் |
| 1 | அரியலூர் | 150 | 1000 | 1,50,000 |
| 2 | செங்கல்பட்டு | 150 | 1000 | 1,50,000 |
| 3 | சென்னை | 150 | 1000 | 1,50,000 |
| 4 | கோயம்புத்தூர் | 150 | 1000 | 1,50,000 |
| 5 | கடலூர் | 150 | 1000 | 1,50,000 |
| 6 | தருமபுரி | 150 | 1000 | 1,50,000 |
| 7 | திண்டுக்கல் | 150 | 1000 | 1,50,000 |
| 8 | ஈரோடு | 150 | 1000 | 1,50,000 |
| 9 | கள்ளக்குறிச்சி | 150 | 1000 | 1,50,000 |
| 10 | காஞ்சிபுரம் | 150 | 1000 | 1,50,000 |
| 11 | கன்னியாகுமரி | 150 | 1000 | 1,50,000 |
| 12 | கரூர் | 150 | 1000 | 1,50,000 |
| 13 | கிருஷ்ணகிரி | 150 | 1000 | 1,50,000 |
| 14 | மதுரை | 150 | 1000 | 1,50,000 |
| 15 | மயிலாடுதுறை | 150 | 1000 | 1,50,000 |
| 16 | நாகப்பட்டினம் | 150 | 1000 | 1,50,000 |
| 17 | நாமக்கல் | 150 | 1000 | 1,50,000 |
| 18 | நீலகிரி | 150 | 1000 | 1,50,000 |
| 19 | பெரம்பலூர் | 150 | 1000 | 1,50,000 |
| 20 | புதுக்கோட்டை | 150 | 1000 | 1,50,000 |
| 21 | இராமநாதபுரம் | 150 | 1000 | 1,50,000 |
| 22 | இராணிப்பேட்டை | 150 | 1000 | 1,50,000 |
| 23 | சேலம் | 150 | 1000 | 1,50,000 |
| 24 | சிவகங்கை | 150 | 1000 | 1,50,000 |
| 25 | தஞ்சாவூர் | 150 | 1000 | 1,50,000 |
| 26 | தேனி | 150 | 1000 | 1,50,000 |
| 27 | தென்காசி | 150 | 1000 | 1,50,000 |
| 28 | திருநெல்வேலி | 150 | 1000 | 1,50,000 |
| 29 | திருப்பூர் | 150 | 1000 | 1,50,000 |
| 30 | திருவள்ளூர் | 150 | 1000 | 1,50,000 |
| 31 | திருவண்ணாமலை | 150 | 1000 | 1,50,000 |
| 32 | திருவாரூர் | 150 | 1000 | 1,50,000 |
| 33 | தூத்துக்குடி | 150 | 1000 | 1,50,000 |
| 34 | திருச்சிராப்பள்ளி | 150 | 1000 | 1,50,000 |
| 35 | திருப்பத்தூர் | 150 | 1000 | 1,50,000 |
| 36 | வேலூர் | 150 | 1000 | 1,50,000 |
| 37 | விழுப்புரம் | 150 | 1000 | 1,50,000 |
| 38 | விருதுநகர் | 150 | 1000 | 1,50,000 |
| | மொத்தம் | 5700 | 38000 | 57,00,000 |

இயக்குநர்

14/2/25